செய்தி வெளியீடு எண்: 447 நாள் : 17.08.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (17.8.2013) சென்னைப் பல்கலைக்கழகத்தில் 84 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சேப்பாக்கம் வளாக தோரண வாயிலை திறந்து வைத்தார்கள்.

இந்தியாவின் பழமையான பல்கலைக்கழகங்களில் புகழ் பெற்ற ஒன்றான சென்னைப் பல்கலைக்கழகம் 1857–ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பழமையும், பெருமையும் மிக்க சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாரம்பரியத்தைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாக தோரண வாயில், 19 அடி உயரமுடைய இரு கல் தூண்களுடன் 19 அடி இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு தூண்களுக்கு இடையேயான இணைப்பும் கருங்கற்களாலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதன்மேல் 24 அடி நீளமும், சுமார் 20 டன் எடையும் கொண்ட ஒரே கல்லாலான உத்தரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கல் உத்தரத்தின் மேல் கர்ண கூடு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பெயர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளதுடன், உத்தரத்தின் நடுவில் உள்ள கல்லில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இலச்சினை (Emblem) பித்தளையில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், தோரண வாயிலின் இருபுறமும் பாதசாரிகளுக்கு 10 அடி உயரம் கொண்ட கல் தூண்களின் மூலம் 4 ½ அடி அகலமுள்ள வழி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தோரண வாயில் பண்டைய தமிழர் கட்டடக் கலையும், கோத்திக் கட்டடக் கலையும் இணைந்த வடிவமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. தோரண வாயிலில் உள்ள தூண்களில் இலை மற்றும் பூக்களுடன் கூடிய கொடி போன்ற சிற்பமும், மேலே உள்ள உத்திரத்தின் கீழ்ப்பகுதியில் மூன்று இடங்களில் வட்டக் கமலமும் செதுக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய தோரண வாயில், மாமல்லபுரத்தில் அமைந்துள்ள அரசினர் சிற்ப மற்றும் கட்டடக் கலைக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மரபு வழியில் வந்த சிற்பிகள் ஆகியோரால் உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பாரம்பரிய பெருமை மிக்க சென்னைப் பல்கலைக்கழகத்தின் கட்டட வடிவமைப்புகளுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் 84 லட்சம் ரூபாய் செலவில் கல்லால் அமைக்கப்பட்டுள்ள சேப்பாக்கம் வளாக தோரண வாயிலை இன்று (17.8.2013) திறந்து வைத்தார்கள். அப்போது, சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆலமரக் கன்று ஒன்றையும் நட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர், சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர், அரசு உயர் அலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் பெருந்திரளான மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 17.8.2013